# கிராமத்து தெய்வங்கள்



கிராம மக்களின் நம்பிக்கைகள், ஆசைகள், ஆவல்கள் ஆகியவை அனைத்துமே மிகவும் எளிமையானவை. ஒரு பசு சாணி போடுவதற்காக வாலைத்தூக்கினாலே போதும். அந்த கிராமத்துப் பெண்ணின் முகம் மலர்ந்துவிடும். சாணிபோடும் போதே அதை அப்படி யே கூடையில் ஏந்திக் கொள்வதற்காக அவள் ஓடுவாள். இவ்வளவு எளிமையானது தான் அவளது ஆசை. இத்தகைய கிராம மக்களின் தெய்வங்களும் அத்த கையவைதான். மக்கள் வாழ்க்கை யோடு பிண்ணிப் பிணைந்தவை அவை. சமூக வாழ்க்கையின் மதிப்பீடு களின் கைரேகைகளை கிராமத்துத் தெய்வங்களின் மீது நிறைய காண முடியும். இவற்றைச் சுற்றி நிலவும் தொல் பழங்கதைகளில் பலவற்றைக் கேட்டோமென்றால், இந்தத் தெய்வங் களில் பலவும் அந்த மக்களிலேயே ஒருவராக இருந்து, பிறகு தெய்வமாக மாறியவைதான் ஏராளம்.

இந்துக்களின் பெரிய கோயில் களில் காணப்படும் தெய்வங்களைப் போன்றவை அல்ல இவை. கிராம தெய்வங்கள் பல, மனித வடிவங் களோடு மிகவும் இயல்பாக ஒத்துப் போகக் கூடியவை. ஆறுமுகம், நான்கு முகம், என்றெல்லாம் இல்லாமல், எட்டுக்கை, பத்துக்கை, பதினாலு கை என்று இயல்பு நவிற்சி கடக்காமல்தான் பெரும்பாலான கிராம தெய்வங்கள் இருப்பதை நாம் அறியலாம். சிவன், விஷ்ணு, பிரம்மா, லஷ்மி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களைச் செதுக்க வேண்டுமென்றாலும், செப்புத் திரு மேனிகளாக உருக்கி வார்க்க வேண்டு மென்றாலும் சிற்ப சாஸ்திரத்தில் அதற்கென்று கண்டிப்பான இலக்கண வரையறைகள் உண்டு.

இந்திரன்

சிற்ப செந்நூல்கள் இதற்கென தெளிவான அளவுகளை ஒவ்வொரு கடவுளுக்கு ஒன்றாக வரையறுத்து வைத்திருக்கின்றன. இவை கண்டிப்பாகக் கடைபிடிக்கப்பட வேண்டியவை. ஆனால் கிராம தெய்வங்கள் இத்தகைய தீர்க்கமான இலக்கண விதி முறைகள் கொண்டவை அல்ல.

மூன்று செங்கல்லை நட்டு வைத்து, குங்குமம் வைத்து மலர்தூவி வழி படத்தொடங்கிவிடுகிறான் அவன். திருநெல்வேலி போன்ற பகுதிகளில் பரவலாக காணப்படும் சுடலைமாடன் எனும் தெய்வம் வெறும் பீடம் ஒன்றும், அதில் விளக்கு ஒன்றை ஏற்றி வைக்கத் தகுந்த மாடம் ஒன்றும்தான்.


சுடுமண் சிற்பங்களைச் செய்வதில் தமிழன் தனித் தேர்ச்சி பெறத் தொடங்கியபோது அவனது கிராமத்து தெய்வங்களுக்கு அவனது மனோலயப்பட்ட வடிவங்கள் கொடுக்கப்பட்டன. உருட்டி விழிக்கும் கண்களும், வாளேந்திய கரமும், குருதி சொட்டச் சொட்ட வெட்டப்பட்ட தலையை ஏந்திய கையும், நீண்ட நாக்கும் என்று அந்த கிராமத்துக் கலைஞரின் கற்பனை சமூக விழுமியங்களுக்கு ஏற்ப விரிவான வெளிப்பாடுகளை அடையத் தொடங்கியது. 'கொலையில் உதித்த தெய்வங்கள்' எனும் தனது கட்டுரை ஒன்றில் மக்களியல் அறிஞர் ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிடுவது போன்று, ஏதேனும் ஒரு சமூகப் பிரச்சினை காரணமாக கொலை செய்யப்படுகிற ஒரு மனிதன் அந்த கிராம மக்களால் தெய்வமாக்கப்பட்டு வழிபடப்படுகிறான். இதனால்தான் கிராம தெய்வங்களின் உருவங்கள் இயல்பு நவிற்சி கடந்து பல தலைகள், பலகைகள் கொண்டவையாக அமைவதில்லை.

உலகப் புகழ்பெற்ற தமிழகத்து செப்புத்திருமேனிகளில் மிக முக்கியமானதான ஆண் உருவமான சிவனும், பெண் உருவமான பார்வதியும் இணைந்த கலை சாதனையாக விளங்கும் அர்த்த நாரீஸ்வரர்' போன்ற கற்பனை வடிவங்களை கிராம தெய்வங்களில்காண முடிவதில்லை. அவை மனிதனே கடவுளான நிலைமை கொண்டவை. இத்தகைய நிலையை ஜேம்ஸ் ஜார்ஜ் ஃப்ரேசர் என்ற மானிடவியல் அறிஞர் மிக அழகாகத் தனது 'தங்கப்பூங் கொத்து' (The holden Bough) எனும் நூலில் விளக்குவார். இந்நூலில் இந்தியாவில் மனிதர்கள் கடவுள்களாக வழிபடப்படுவதைக் குறித்து விரிவாக எழுதி இருக்கிறார்.

எந்த சமூகத்தில் மனிதர்களுக்கே அதீதமான சக்திகள் உண்டு என்று நம்பப்படுகிறதோ அந்த சமூகத்தில் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இருக்கும் எல்லைக் கோடு மிகவும் பலவீனமாகி விடுகிறது. தொல் பழங்காலத்தில் இந்த உலகம் குறித்த மனிதனின் புரிதல் மிகவும் ஜனநாயகப் படுத்தப்பட்டதாக இருந்தது. உலகிலுள்ள அனைத்திற்கும் - அது உயிருள்ளதாக இருந்தாலும், ஜடப் பொருட்களாக இருந்தாலும்- சமமான ஒரு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் வளர்ச்சி யில் மனிதன் தனது உலகின் மற்றும் இந்த பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தையும் அதில் மனிதன் என்பவரின் இடம் என்ன என்பதையும் புரிந்து கொள்ளத் தொடங்கினான்.



இந்த காலகட்டத்தில் தனக்கு வெளியே இருப்ப வற்றைத் தனது மந்திர சக்தி என்கிற ஒன்றைக் கட்டி எழுப்புவதன் மூலமாகக் கட்டுப்படுத்த முடியும் என்றும் நம்பினான். நாளடைவில் இந்த மந்திர தந்திரங்கள், பிரார்த்தனை, பலி கொடுத்தல் போன்ற சரியை கிரியைகளுக்கு இடம் கொடுத்து பின்னடைந்தது. ரசவாதம் என்பது ரசாயனம் என்கிற அறிவியலுக்கு இடம் கொடுத்து மறைந்தது போன்று மந்திர தந்திரங்கள் வழி பாட்டுக்கு இடம் கொடுத்து மறையத் தொடங்கின.



மனித குலத்தின் மத வரலாற்றின் தொடக்க நாள் களில் மனிதனே கடவுளாகக் கருதப்பட்ட நிலை இன்னமும் தமிழகத்து கிராமப்புறங் களில் காணப்படுகின்றன.

இதனால் தான் கிராம தேவதைகளான வால் முனி, அய்யனார், சுடலைமாடன், ஏழுகன்னிமார், மதுரை வீரன் என்று நீளும் பட்டியலில் பலர் மனிதர்களாக இருந்து தெய்வ நிலைக்கு உயர்ந்தவர் களாக உள்ளனர். உலகிலேயே அதிக மான மனித கடவுள்களைக் கொண்ட நாடு இந்தியா தான் என்று குறிப்பிடு கிறார் ஃப்ரேசர்.

தமிழகத்தில் நீலகிரி மலையில் இருக்கும் தோடர்கள் என்னும் மலை யின மக்களிடம் ஒரு நம்பிக்கை இருக் கிறது. மாடுகளை வைத்து பால் உற் பத்தி செய்யும் பண்ணையைக் கோயில் போலக் கருதுகிறார்கள். இந்த பால் பண்ணையின் தலைவன் கடவுளுக்கு இணையானவனாகக் கருதப்படுகிறான். நமது வரலாற்றைப் புரட்டிப் பார்த்தோமானால் அரசர்கள் தங்களை பெருங்கடவுள்கள் பலரின் வழித்தோன்றல்களாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டதை அறிய முடியும். இதற்கான மன்னர் களின் நோக்கம், தான் தனது குடிமக் களிடமிருந்து வேறுபட்டவனாகவும், மிக உயர்ந்தவனாகவும் இருக்கும் நிலையை உறுதிப் படுத்திக் கொள்வ தாகும். ஆனால் கிராம தெய்வங்களின் நோக்கம் இத்த கையது அல்ல. மக்களிட மிருந்து உருவாவ தின் காரண மாக மக் கள் மதிப்பீடு களின் ஒரு குறியீடாக கிராம தெய்வங்கள் திகழ் கின்றன.

வழிபடுதல், பலியிடுதல் ஆகியவை தலை தூக்கிய ஒரு சமூகத்தில் பலியிடுவதற்கு ஒரு பதிலியாக சுடுமண் குதிரைகள், சுடுமண் கன்றுக் கட்டிகள் ஆகிய வற்றைக் காணிக்கையாகச் செலுத்தும் ஒரு வழிபாட்டு முறை தோன்றியது. இதன் விளைவாக சுடுமண் சிற்ப வெளிப்பாடு ஒரு புதிய மறு மலர்ச்சி அடைந்தது. பெருமித கடவுள்களின் உருவங்களைச் செய்பவர்களைப் போலன்றி, கிராம தெய்வங்களை உருவாக்கு பவர்களின் கலை சுதந்திரம் எல்லையற்றது. அதனால் தான் அவை காலந்தோறும் புதிய புதிய வடிவங்களை அடைந்து வருகின்றன. தமிழகத்தின் பல்வேறு கிராமங்களின் அய்யனார் சிலைகளைப் பார்க்கிற போது அந்த கிராம தெய்வங்களின் காவலர்களாக தற்கால காவல்துறை உடையணிந்து, துப்பாக்கி ஏந்திய உருவங்களும், நாய், மற்றும் விநோத கலவையான விலங்குகளும் இடம் பெற்றிருப்பதைக் காண முடியும். இந்த வெளிப் பாட்டுச் சுதந்திரம் இந்த கிராமத்து தெய்வங்களை நமது அன்றாட வாழ்க்கையோடு நேரிடை யாகத் தொடர்புகொண்ட வடிவங் களாக உருப்பெற உதவுகிறது.

தமிழகம் முழுவதும் காணப்படும் கிராமத்து தெய்வங்கள் குறித்த ஆய்வு கள் இப்போது பல்வேறு அறிஞர்களால் தீவிரப் பட்டுள்ளன. இதன் விளைவாக தமிழ் மக்களின் பண்பாடு குறித்த, தமிழ் அழகியல் குறித்த மிக நல்ல கண்டு பிடிப்புகள் நிகழ்த்தப் பெறும் என்பது உறுதி.

வழிபடுதல், பலியிடுதல் ஆகியவை தலை தூக்கிய ஒரு சமூகத்தில் பலியிடுவதற்கு ஒரு பதிலியாக சுடுமண் குதிரைகள், சுடுமண் கன்றுக் கட்டிகள் ஆகிய வற்றைக் காணிக்கை யாகச் செலுத்தும் ஒரு வழிபாட்டு முறை தோன்றியது. இதன் விளைவாக சுடுமண் சிற்ப வெளிப்பாடு ஒரு புதிய மறு மலர்ச்சி அடைந்தது.